ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்யதர்மம்.

योभिध्यायन्नुत्पतिष्णून्निहन्यात् अनाचारेणाऽप्रतिबुध्यमानः ।
सवैमृत्युं मृत्युरिवात्तिभूत्वा ह्येवंविद्वान्योभिनिहन्तिकामान् ॥

ஹே! திருதராஷ்டிரரே!! எவனொருவன் விஷயதோஷ சிந்தனை செய்துகொண்டு தன்மேலே துள்ளித்துள்ளி விழுகின்ற விஷயங்களை நினைக்காமலே அனாதரவுனால், நசிக்கச்செய்கின்றானோ, அவன்தான் மிருத்தியுவுக்கு மிருத்தியுவாகவிருந்துகொண்டு மிருத்தியுவைச் சாப்பிடுகிறான். எவன் காமங்களைக் கொல்கின்றானோ? அவனல்லவா வித்வான்.

ஆஸ்திகர்களே!! ஸனத்குமாரர் திருதராஷ்டிரருக்கு விஷயங்களைச் சிந்திக்காமல் ஆத்மானுஸந்தானஞ் செய்யுமுத்தமரை வித்வானென்று சொல்லிக்கொடுக்கின்றார். இதனால் விஷய சுகத்தை விரும்புகிறவர்கள் வித்வான்களல்லவென்று ஸித்தித்தது. இப்படிப்பட்ட வித்வான் இவ்வுலகில் இப்போது கிடைப்பதரிது. போலி வித்வானும் போலி மஹாத்மாவுந்தான் இப்போது கிடைக்கும். கலிகால வேதாந்திகளாகிய காங்கிரஸ்காரர்கள் தமக்குள் ஒருவரை வித்வானாகக் கற்பித்துக்கொண்டுவிடுவார்களானால் உண்மை ஒளியுமா? எவர் பிறரை மயங்கிக் கலங்கும்படி செய்வதில் ஸமர்த்தமான புதுப் பிரசாரவலையை அகலமாய் வீசுவதற்காகத் தமிழிலும் கையெழுத்துப் போட்டு ஆதித் திராவிடர்களின் ஆலயப்பிரவேச விஷயத்தில் ஒரு அறிக்கையை வெளியிட்டுத் தமிழ் நாடெங்கும் பரபரப்புண்டாக்குகிறாரோ? அவரை யாராவது வித்வானென்று சொல்வாரா? அவர் வாக்குக்குச் செல்வாக்கு எப்படிக் கொடுப்பது? பலர் கூடி ஒருவரை வித்வானென்று பட்டாபிஷேகஞ்செய்தால் அவர் உண்மையில் வித்வானாகிவிடுவாரா? நடத்தையாலல்லவா வித்வானைக் கண்டுபிடிக்கவேண்டும்.

உண்மையை மறைக்கலாமா?

பேபர்க்காரர்களைக்கைவசப்படுத்திக்கொண்டு உண்மையை மறைத்து மனச்சாக்ஷிக்கு விரோதமாகப் பொய் விஷயங்களை ஜனங்களிடம் பரப்புவதில் வஞ்சகம்வாய்ந்த காந்திஜீயின் தூதர்களுக்கு உண்மை அறிவு எது? ஆத[illegible] ஆஸ்திகர்களே! வஞ்சகர்களை நம்பாதீர்கள். உண்மை வித்வான்களைத் தலைவராகத் தெரிந்தெடுத்து க்ஷேமம்பெருங்கள்.

ந்யூஸ் பேபரைப் பொய்யென்ற பாவனையுடன் பாருங்கள். இதுதான் இந்த சுலோகத்தாலிப்போது கிடைத்த பாவமாகும். சுபம்.

V. J. S.

ஆர்ய தர்மம்.

ஆங்கிரஸ-ஹு ஐப்பசி-மீ ககஉ

ஆஸ்திகர்களுக்கோர் அறிவிப்பு.

ஆஸ்திக ஹிந்துக்களே!

"மகாத்மா காந்தி" ஆதித்திராவிடர்கள் மீது செலுத்திய அனுதாபத்தின் பயனாக அவாடியாரனேகர் பிரமாணவிருத்தமாகவும், வழக்க விருத்தமாகவும், பஞ்சமர்களை முன்னேற்றமடையச்செய்வதில் முயற்சி செய்துவருகின்றனர். காந்தியைப்போல் காந்தியின் கூட்டத்தாருக்கும், கருதியகாரியம் கைகூடும் வரையில், ஆவியைக்கூட அர்ப்பணம் பண்ணும் பிடிவாதமுண்டென்பது தங்களுக்குத் தெறியும். இவ்விதமிருக்க ஆதித்திராவிடர் ஆலயப்பிரவேச விஷயத்தில், மும்மரமாக அக்கூட்டத்தார் அனுஷ்டித்துவரும் முயற்சிகளைத் தடுப்பதற்காக நாம் கொஞ்சமாவது முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோமா? ஏதோ சிலவிடங்களில் மட்டிலும் எதிர்ப்பிரசாரம் ஏற்பட்டால், என்ன நன்மை நமக்கு ஏற்படும்? எதிர்பிரசாரம் அதிகமாக ஏற்பட்டால், நாட்டில் கலகந்தானே அதிகரிக்கும் என்றால், கலகத்திற்குக் கலங்கிநிற்கும் காலமிதுவா? பொதுக்கூட்டங்களாலும், பிரசங்கங்களாலும். பட்டினிகிடந்து உயிரைவிட எத்தனிப்பதாலும், வைதிகர்களைப் பரிஹஸித்துத் திட்டுதலாலும், தம் காரியத்துக்குச் சாதகமாகக் கையெழுத்து வாங்குவதாலும், சட்டசபையில் சட்டம் செய்யும்படி தூண்டுதலாலும், இன்னம் பலமுள்ள பல காரியங்களாலும், காந்தியின் தொண்டர்கள் தீண்டாமைவிலக்கு விஷயத்திலும், தீண்டாதாருக்குக் கோயில்களைத் திறந்துவிடுவதிலும், மிக வேகமாக வேலைசெய்து வருகின்றனர். இதற்காகத் தென்னாட்டுத் தலைவாக தெரிந்தெடுக்கப்பட்டத் தலைவரும், தமிழ்நாட்டில்ச் சுற்றுப் பிரயாணம் செய்தார்,

ஆஸ்திகர்களுக்கோர் அறிவிப்பு.

சுற்றுப் பிரயாணத்தின் மூலமாக இவர் தாம் விரும்பிய விஷயத்தில் பொதுஜன அபிப்பிராயத்தையும், தர்மகர்த்தாக்களின் உணர்ச்சியையும், தெரிந்துகொண்டு விட்டாராம். இவ்வுணர்வின் பயனாக வைதிகர்களின் மண்டை உருளுகிறது. "உறலுக்கு ஒருபுறமிடி மத்தளத்துக்கு இருபுறமிடி" இந்த வைதிகர்களுக்கு நான்குபுறமுமிடி. ஜஸ்டிஸ்கக்ஷி ஒருபுறம், காங்கிரஸ் கக்ஷி மற்றொருபுறம், சுயமரியாதைக்கக்ஷி இன்னொருபுறம், ஆர்யஸமாஜ பிரும்மஸமாஜக்கக்ஷி வேறொருபுறமுமாக, வைதிகர் படும் பாட்டிற்கு அளவுஸங்கியை இல்லை. எல்லா விஷயத்திற்கும் வைதிகர் தான் முட்டுக்கட்டை என்று எல்லாக்கக்ஷியும் வைதிகரைக்கண்டு கரிக்கின்றன. ஓ! வைதிகர்களே இக்காந்தி சிஷ்யர்களுடன், தீண்டாதாரின் ஆலயப்பிரவேச விஷயத்தில், என்ன செய்ய வேண்டுமென்று ஆலோசித்துக் கொண்டிருக்கிறீர்கள். இவர்களிடம் உங்கள் சாஸ்திரமும், யுக்திவாதமும் எதுவும் ஏறமாட்டாது என்பது நிச்சயம். இவர்களுடன் போர்புரிய உங்களுக்கு என்ன ஸகாயமிருக்கிறது. தெய்வம் ஸஹாயமாகவிருந்தால், ஒருவாறு உங்களுக்கு இவர்களுடன் போர்புரிய அவகாசமுண்டு. அரசனும், தேசமும், நாஸ்திகமயமாக விளங்குமானால் ஆலய தர்மங்களைக் காப்பாற்ற தெய்வஸஹாயந்தான் முக்கியமாக வேண்டும். இதன்றி பிருகிருதவிஷயத்தில் உங்களுடைய ஆக்ஷேபவாதங்களையெல்லாம், இக்காங்கிரஸ்காரர்கள் பொருட்படுத்தப்போவதில்லை.

ஆனால் ஒரு விசேஷமுண்டு.

தீண்டாதாரின் ஆலயப்பிரவேசத்திற்கு விரோதிகள் தேவஸ்தான கமிட்டிகளும், சட்டங்களுந்தானென்று இவர்களுக்கு முடிவு ஏற்பட்டுவிட்டது. ஒன்று சட்டம் மாறவேண்டும். இல்லாவிட்டால், தைரியமுள்ள தேவஸ்தான மெம்பர்ஏற்படவேண்டும். இதன்றி வேறொரு உபாயமிவர்களுக்குக் கிடையாது. இவ்விரண்டு முடிவும் ஸித்தித்துவிடுமென்பது நிச்சயமில்லை. அப்படி ஸித்தியடைந்தாலும் பொதுஜனக்கிளர்ச்சி ஓய்ந்துவிடுமா? பொதுஜனக் கிளர்ச்சியால் பொதுஜனப்பிளவு ஏற்படமாட்டாதா? ஒரு சாராரின் த்வேஷத்தையோ, பிளவையோ அபிப்பிராயத்தையோ? அனுஸரிக்காமல் போனால், "எல்லாப்பிராணிகளும் ஸமமென்ற வாதமிவர்களுக்கு எவ்வாறு பொருந்தும். ஸ்வராஜ்யம்"

வெறிகொண்ட தொண்டர்களிடம், "எல்லாம் ஸமம்" என்ற பேச்செல்லாம் வெறும் பூச்சுத்தான்.

இவர்களிடம் ஸர்வஸமத்வ பாவனை கொஞ்சமாவது இருக்குமானால் ஏன் தம் பிடிவாதத்துக்குட்படாதவர்களாகிய மேனாட்டினரையும், வைதிக மதாபிமானிகளையும் கண்டவிடமெல்லாம் மண்டையையுருட்டவேண்டும்? ஏன் ஸ்வய அரசாக்ஷி விரும்பவேண்டும். மேனாட்டு அரசாக்ஷி அநீதியென்றால், உங்களுடைய சுய அரசாக்ஷிமுறை மட்டிலும் வெகு நீதியாக அமைக்கப்பட்டிருக்கின்றதோ?

காங்கிரஸ்காரரின் புத்தி எல்லாம் நீதிதானோ? தங்களுடைய தற்கால நிலைமையாலேயே பிற்காலமும் எவ்விதச் சுய அரசாக்ஷி முறை நிகழுமென்பது எங்களுக்குப் புலப்படவில்லையா? உங்களுடைய சுய அரசாக்ஷிமுறையும் அதனுபாயமும் நீதி வழுவாமலிருப்பதாக அனுபவத்தில் அல்லவா காட்ட முன்வரவேண்டும். மதத்தை அறவே ஒழித்துவிட்டுச் சுய அரசாஷியை விரும்பிய தேசமேதாவது ஒன்றுண்டா? உங்களுடைய வேலையெல்லாம் முடிவில் பயனைத்தரும் என்பதில் என்ன நம்பிக்கை? ஸ்வராஜ்யம் மனோராஜ்யமாகவும் மாறலாமன்றோ? உங்களுக்கு ராஜகீயதந்திர அறிவு அயல்நாட்டினரைவிட அற்பமென்பதை நீங்களே மறுக்க முடியாது. ஆகவே அயல்நாட்டு அரசாக்ஷியைவிட உங்கள் சுய அரசாக்ஷி அநீதியாகத்தான் அமையும்.

அயல்நாட்டு அரசாங்கம் மதத்தில் தலையிடுவதில்லை என்ற பிரதிக்ஞையையாவது ஆதிகாலத்தில் செய்துகொடுத்தது நம்மவருக்கு தைரியங்கொடுத்தது, பிறகு தங்களைப்போன்ற மகான்களின் சூழ்ச்சியால், அப்பிரதிக்ஞைக்குப் பங்கமேற்படும்படி நேரிட்டதானால் அரசாங்கமென்னசெய்யும். பாவம்? உங்களுடைய சுய அரசாக்ஷி முறையில் ஹிந்துமதமிருந்தவிடமே தெறியாமல் போய்விடுமென்பதில் ஸந்தேகமில்லை, ஆகையால் உங்கள் சுய அரசாக்ஷிமுறை ஆதரிக்கத்தக்கதில்லை.

ஹரிஜநநாமகரணம்.

இனி இப்படித்தான் பஞ்சமர்கள் வியவஹரிக்கப் படுவார்களாம். இதனால் பஞ்சமர்களிடம் காந்திக்கூட்டத்தாருக்குப் பரமப்பிரியமுண்டென்பதுதான் தெரிகின்றது. ஒருவன் தன்

பெயரை தன்னிஷ்டப்படி மாற்றிக்கொள்ளமுடியவில்லை. அரசாங்க அனுமதியிருந்தால் மாற்றிக்கொள்ளலாம். இதன்றி தன் இஷ்டப்படிப் பெயரை மாற்றிக் கொள்வதால், அனேக பாதகம் ஏற்படுமானதால் பெருங் குற்றமேயாகும். இப்பெயர் மாறுட்டத்தாலேற்படும் கஷ்டம் இப்போது இவர்களுக்குப் புலப்படாது. பிறகுதான் விளங்கும்.

மேனாட்டுநாகரீக த்வேஷமேன்?

மேனாட்டு ஸமத்வவாதத்தைப் பின்பற்றியக் காந்தி சிஷ்யர்களுக்கு மேனாட்டு நாகரீகத்வேஷமேற்படுவதேன்? பிறருக்குச் சமதர்மம், ஸத்யம், அஹிம்ஸை, இவை வேண்டுமென்று நன்கு உபதேசிக்குமிவர்களிடம் இவை அணுவளவுமில்லை. யாராவது இவர் கக்ஷிக்கு எதிர்வாதமிட்டால் அச்சமயமிவர்கள் முகத்தில் எள்ளுங்கொள்ளும் வெடிக்கும்.

மனமும் வாக்கும் ஒத்துப் பேசுவது ஸத்தியம். இவர்கள் ஸத்யமே பேசுவதில்லை. "மேனாட்டு வஸ்துக்களைப் பஹிஷ்கரிக்க வேண்டும். கதரைக் கட்டவேண்டும். உத்யோக மோஹங் கொள்ளலாகாது" என்று கூக்குரலிடுமிவர்கள் மேனாட்டினர்களெல்லாரும் ஸமமாக சர்ச்சுக்குச் செல்லவில்லையா? கீழ் நாட்டினருமவ்வாறே சமமாக ஆலயப்ரவேசம்செய்வதில் என்ன தோஷமென்று தனக்குச் சாதகமாயுள்ள விஷயத்தில் மட்டிலும் அவர்களை ஆதாரமாக எடுத்துக் காட்டுவது எள்ளளவும் பொருத்தமில்லை.

மஹாத்மா யார்?

இவ் வுலகச் சிற்றின்பத்தை அறவே ஒழித்தவரல்லவா மஹாத்மா. அவ்ருடைய ஆத்மா தான் பெரியது. அவர்கள் அந்தர்முக திருஷ்டியால் தன் ஸ்வரூபத்தையே நாடியிருப்பார்கள். அவர்களுக்கு பாஹ்ய உலகத்தில் திருஷ்டியே இருக்காது. இந்த இந்தியாவுக்குமட்டிலுமல்ல. இம் மூன்று உலகத்திற்குமே அதிபதியாகப் பட்டாபிஷேகம் செய்வதாயிருந்தாலும் இவர்கள் விரும்பவேமாட்டார்கள். ஸ்வாராஜ்யம் பெற்றவர்களுக்கு ஸ்வராஜ்யம் எதற்கு? தன்னுடைய நடைத்தையால் அல்லவா தன் மாஹாத்மியம் வெளிப்படவேண்டும். நடத்தை ஸாதாரணமா

கவே இருந்தால் மாஹாத்மியமும் ஸாதாரணந்தான். "குருடனைச் செந்தாமரைக்கண்ண"னென்பதுபோல் முடியும்.

பரோபகாரம்.

இது உத்தம தர்மந்தான். இதற்கு நியாயமும் கலக்க வேண்டும். ஒருவருடைய உபகாரத்தால் மற்றவருக்கு அபகாரம் நேரிடுமானல் அது பரோபகார தர்மமல்ல. அதுவும் நியாயத்தையும் எல்லையும் கடக்கக்கூடாது. நியாயா நியாயத்தைத் தன் புத்தி சக்தியால் தீர்மானித்துவிடலாகாது. தன்னைச் சேர்ந்தவர்களிடம் அநீதியும் நீதியாகப் புலப்படுவது உலகத்திற்குச் சுபாவமல்லவா? ஆகவே பிரமாணம் அலக்ஷ்யம் வேண்டும். பிரமாணத்தை நம்பினதுபோல் நடிப்பது போதாது. பிரமாணத்தில்தான் தன் ஸத்தியாக்ரஹத்தை நிலை நாட்டவேண்டும். பிரமாணப்படியா எல்லா காரியங்களுமுலகில் நடைபெற்றுவருகின்றன என்பது ஸரியான கேள்வியல்ல. அதையும் பிரமாணப்படி நடைபெறச் செய்வதல்லவா தலைவர் கடமையாகும். இதன்றி பிரமாணத்தை மறைத்துவிடுவதும் மறந்துபோகும்படி முயற்சிப்பதும் மகா பிசகு. காந்தி சிஷ்யர்கள் சாஸ்திரப் பிரமாணங்களை வாய்கூசாமல் வைதுவருவதைக் கவனித்தால் அவருக்கும் அவற்றில் அப்படித்தான் அபிப்பிராயமிருக்கும் என்பது ஸ்பஷ்டம்.

மூடப் பிடிவாதம்.

இது கொடிய விரோதி. இதனை வாதப்பிரதிவாதங்களால் ஒருபோதும்மாற்றிவிடமுடியாது. விவாதம் அதிகரிக்குமானல் பிடிவாதமும் வலுக்குமேயன்றி குறையாது. பகவானுடைய கிருபையால்த்தான் இக் காந்தி கூட்டத்தாருக்கு இப் பிடிவாதம் மாறவேண்டும்.

சுபம்.

V ஜகதீசுவர சாஸ்திரிகள்.

மனுஷ்ய ஜன்மத்தின் பயன்.

மனுஷ்ய ஜன்மத்தை அடைந்ததின்பயன் புருஷார்த்தங்களுள் முதலாவதான தர்மத்தை உள்ளபடி உணர்ந்து அனுஷ்டித்து அதர்மத்தையும் அறிந்து விலக்கி அதன்மூலமாகத் தர்ம விரோதமில்லாத அர்த்தகாமங்களையும் ஆனுஷங்கிகமாக அனுபவித்துக் கடைசியில் மோக்ஷஸாம்ராஜ்யம் என்னும் உயர்ந்த புருஷார்த்தம் பெருவதே. இவ்விதமில்லாமல் கேவலம் அர்த்தகாமங்களைப் பெருவதே பயனில்லை. ஏனெனில் அர்த்தகாமங்களை அனுபவிப்பதற்கு இவ்வித உயர்ந்த மனுஷ்யஜன்மந்தான் வேண்டு வேண்டுமென்பது அவச்யமில்லை. பசு பக்ஷி முதலிய இதர ஜன்மங்களிலும் அர்த்தகாமங்களை அனுபவிக்கலாம். பசு பக்ஷி முதலிய ஜந்துக்களுக்கும் மனுஷ்யர்களுக்கும் ஆஹாரம் நித்ரை ஸ்திரீபோகம் மக்களைப்பெறுவது முதலியவிஷயத்தில் வித்யாஸம் காணப்படுவதில்லை. பக்ஷிகள் தாம் வஸிப்பதற்கு வெகு அழகாகக் கூடுகட்டுவதையும் எரும்புகள் அரிசி முதலிய தின்பண்டங்களை அவ்வப்போது சேகரிப்பதையும் இதுபோலவே மற்றுமுள்ள உலகானுபவங்களையும் பார்த்தால் அர்த்தங்களை ஸம்பாதிப்பது திர்யக் ஜன்மங்களுக்கும் ஸாதாரணமென்பது புலப்படவில்லையா?

இவ்விதமே காமங்களை அனுபவிப்பதும் திர்யக்ஜன்மங்களுக்கும் ஸாதாரணமென்பது வெளிப்படை. இவ்விஷயம்

मदनस्याज्ञाकरणेमन्ये जगदखिलमेकरूपमिदम् ।
तिर्यञ्च इति नरा इति देवाइत्यन्यतोभेदः ॥

"காமனது ஆஜ்ஞையைத் தவருமல் அனுஷ்டிப்பதில் உலகமுழுவதும் ஒரேவிதமாயுள்ளது. திர்யக்ஜாதிகள் மனுஷ்யர்கள் தேவர்கள் என்னும் வேற்றுமைக்குக் காரணம் வேறு" என்று நீலகண்ட தீக்ஷிதர்களால் கூறப்பட்டிருக்கிறது. உற்று நோக்கினுல் அர்த்தகாமங்களை அனுபவிக்கும் விஷயத்தில் மனுஷ்ய ஜன்மத்தைவிட திர்யக்ஜன்மம் மேலானது என்றே கூறலாம்.

ஏனெனில் மனுஷ்யர்களுக்கு அர்த்தகாமங்களை ஸம்பாதிப்பதற்கும் ஸம்பாதித்ததை அழியாமலிருக்கச் செய்வதற்கும்

எவ்வளவு கஷ்டங்களுண்டோ அவ்வளவு கஷ்டங்கள் பசு பக்ஷி முதலிய ஜன்மங்களுக்கில்லை. இதனாலேயே ஒருவன் மிருகஜன்மத்தைக்கூட விரும்புவதாக ஓர் கவி கூறுகிறார். அதாவது.

> यद्वक्त्रं मुहुरीक्षसे न धनिनां ब्रूषे न चाटून् मृषा
> नैषां गर्वरचश्शृणोषि नच तान् प्रत्याशया धावसि ।
> काले बालतृणानि खादसि परं निद्रासि निद्रागमे
> तन्मे ब्रूहि कुरङ्ग कुत्र भवता किन्नाम तप्तं तपः ॥

"ஓ! மானே! நீ என்னைப்போல் அடிக்கடி தன மதம் பிடித்த பிரபுக்களுடைய முகத்தைப் பார்ப்பதில்லை. அவர்கள் விஷயத்தில் பொட்டயனைச் செந்தாமரைக் கண்ணனென்றும் பொட்டச் சோழியைத் தானம் செய்தற்கு அர்த்தோதயபுண்யகாலம் ஸமுத்திர தீரம் ஏழையாயும் குடும்பியாயுமுள்ள ச்ரோத்திரியன் இவைகளை எதிர்பார்க்கும் பரம கிருபண சிகாமணியைக் கல்பவிருக்ஷமென்றும் பயந்து ஒடுகிறவனை விக்கிரமாதித்யனென்றும் இவ்விதமெல்லாம் வீண் தப்பு ஸ்தோத்திரங்களைச் செய்யவில்லை. அந்த துஷ்ட பிரபுக்களுடைய தன மதத்தினாலுண்டான கர்வ வார்த்தைகளைக் கேழ்ப்பதில்லை. அவர்களைக்குறித்து ஆசைப்பட்டுக்கொண்டு ஓடவில்லை. பின்னையோவெனில் பசித்தகாலத்தில் இளம் பில்லுகளைப் புசிக்கின்றாய். தூக்கம் வரும்பொழுது ஒருவித ஸாதனத்தையும் விரும்பாது தூங்குகின்றாய். ஆகையால் உனது ஜன்மமே மேலானது. இவ்வித உயர்ந்த ஜன்மத்தை அடைவதற்கு நீ எந்த புண்ய ஸ்தலத்தில் எந்தவிதமான தபஸ்ஸைச் செய்தாய்ச் சொல்லு. நானும் அவ்விதம் செய்து உன் ஜன்மத்தை அடைகின்றேன்" என்று.

ஆகையால் அர்த்தகாம விஷயத்தில் மனுஷ்யர்களைப்போல் அவ்வளவு சிரமம் மற்ற ஜன்மங்களில் கிடையாது. மனுஷ்யன் தனது ஆயுஸ்ஸு பூராவாகவும் தனது ஸுகத்திற்காகப் பொருள் தேடுவதும் அதற்காகப் பலவித கஷ்டங்களை அடைவதும் எவ்வளவு பொருள் கிடைத்தாலும் போரும் என்று விச்ராந்தி அடையாமல் சிரமப்படுவதும் உலகானுபவம் பசு முதலிய திர்யக்ஜன்மங்கள் அவ்வப்போது கிடைத்த ஆஹாரத்தைக்கொண்டு ஸந்தோஷப்படுவதும் நாளைக்கென்று பெரும்பாலும் ஸம்பாதிக்காமல் இருப்பதும் அதனால் ஸுகித்திருப்பதும் வெளிப்படை, இது

போல் பசு முதலியது, ஆஹார வியவஹாராதிகளில் மனுஷ்யர்களைப்போல் சமையல் படுக்கை முதலிய பலஸாதனங்களை அபேக்ஷிக்காமலிருப்பதும் வெளிப்படையான விஷயம்.

இதனால் அர்த்தகாம விஷயத்தில் பசு முதலிய ஜன்மங்கள் மனுஷ்ய ஜன்மத்திற்கு ஸமானமாகவோ அல்லது மேலானதாகவோ ஏற்பட்டது.

மேலும் பசு முதலிய ஜன்மத்தில் இஷ்டப்படி விஷய சுகங்களை அனுபவிக்கலாம். அந்த ஜன்மத்தில் பாபம் ஸம்பவிக்காது. மனுஷ்யஜன்மத்தில் தனது இஷ்டப்படி விஷயஸுகங்களை அனுபவித்தால் பாபங்கள் ஸம்பவிக்கும். அதனால் மேன்மேல் துக்கங்கள் விளையும். ஆகையால் இவ்விதம் பலவித காரணங்களால் மனுஷ்ய ஜன்மம் திர்யக் ஜன்மங்களைவிட உயர்ந்தது என்றுகூற இடமில்லை.

இவ்விதமிருக்க எதனால் மனுஷ்யஜன்மம் திர்யக் ஜன்மங்களை விட உயர்ந்ததென ஆலோசித்தால் உயர்ந்த மோக்ஷ ஸாம்ராஜ்ய ஸுகத்தை அடைவதற்கு மூலகாரணமான தர்மத்தையும் அதற்கு விபரீதமான அதர்மத்தையும் தெரிவிக்கும் சாஸ்திரங்கள் மனுஷ்யர்களுக்கென்றே ஏற்பட்டிருப்பதும் அதன் மூலமாகத் தர்மமென்னும் கார்த்தவ்யம் அதர்மமென்னும் அகர்த்தவ்யம் இவைகளின் பகுத்தறிவும அதர்மங்களை விலக்கித் தர்மங்களை அனுஷ்டிப்பதற்குக் கரசரணாதி ஸாதனங்களும் அமைந்திருப்பதே உயர்விற்குக் காரணமென்று கூறவேண்டும்.

ஆகையால் இவ்விதம் உயர்ந்த மனுஷ்ய ஜன்மத்தை அடைந்ததற்குப் பயன் தர்மாதர்மங்களைப் போதிக்கும் சாஸ்திரங்களைப் பெரியோர்களின் உபதேசத்தால் நன்கு அறிந்து அதர்மங்களை விலக்கிக் கரசரணாதிகளான ஸாதனங்களால் விதிப்படி தர்மத்தையனுஷ்டித்துப்பரமேசுவரனது பிரஸாதத்தால் பேரின்பவீடு பெறுவதே. அவ்விதமில்லாமல் பரமேசுவரனால் நாம் கரையேற்றுவதற்காகக் கருணையோடு கொடுக்கப்பட்ட கரசரணாத்யவயவங்களால் பாபகார்யங்களைச்செய்து நமக்கே அனர்த்தத்தை ஸம்பாதித்துக்கொள்வது, ராஜகுமாரன் தனது தகப்பனால் சத்துருக்களை ஜயித்துஸுகமாக இருப்பதற்காகக்கொடுக்கப்பட்ட ஆயுதங்களைக்

கொண்டு தனது சரீரத்தையே நாசம்செய்துகொள்வதுபோல் மூடத்தனமாகும். ஆதலால் இவ்விதம் கிடைத்த உயர்ந்த மனுஷ்ய ஜன்மத்தை ஒரு க்ஷணங்கூட வீண்போக்காமல்,

मुहूर्तमप्यतिक्रान्ते समये ध्यानवर्जिते ।
दस्युभिर्मुषितेनेव युक्तमाक्रन्दितुं भृशम् ॥

"பகவானுடைய தியானம் முதலிய ஸத் கர்மங்களில்லாமல் முஹூர்த்தகாலமாவது வீண்போகுமானால் அதிகமான ஸொத்துக்களைப் பரிகொடுத்தவன்போல அதிகமாகத் துக்கித்து அலறுவ்து நியாயமாகும்'' என்று பெரியோர்களின் வசனமிருததத்தை அனுஸரித்துக் கோடிப் பொன் கொடுத்தாலும் கிடைக்காத காலங்களை துர் விநியோகப்படுத்தாமல் தர்மமார்க்கத்தில் விநியோகப்படுத்துவதே மனுஷ்ய ஜன்மத்தின் பயனாகும்.

இவ்வித மனுஷ்யஜன்மம் தப்பினால் பிறகு ஏற்படும் பசுவாதி ஜன்மங்களில் எவ்விதம் கரையேறமுடியும். தேவாதி ஜன்மங்களில் கூட விஷயபோக ரஸத்தால் கரையேறுவதற்கு வழியில்லை. அதுபற்றியே தேவாதி ஜன்மங்களைவிட மனுஷ்ய ஜன்மம் மேலானது என்றுகூடச் சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் மனுஷ்ய ஜன்மத்தை அடைந்த ஒவ்வொருவரும் தம் தம் வர்ணாச்ரமங்களுக்குத் தக்கவாறு சாஸ்திரங்களில் கூரிய தர்மங்களை அனுஷ்டித்து மனுஷ்ய ஜன்மத்தைப் பயன்படுமாறு செய்வாராக.

சுபம்.

போலகம்; சு. ஸ்ரீராம சாஸ்திரிகள்.

தீண்டாமை விலக்கு.

வைதிகர்களுக்கு ஓர் விக்ஞாபனம்.

இத் தலைப்பெயருடன் 17—10—32ல் ஸ்ரீமான் ஸி ராஜகோபாலாச்சாரியார் வைதிக நண்பர்களுக்கு மரியாதையாக ஓர் விக்ஞாபனம் செய்துகொள்ள விரும்புகிறேனென்று மித்திரனில் எழுதுகிறார். அதைப்பற்றிச் சற்று விசாரிப்பாம்.

இவர் மரியாதையாய் விக்ஞாபனம்செய்கிறேனென்ற வார்த்தைக்கு அடுத்து இவ்விதமெழுதுகிறார்—ஆகம சாக்ஷியாக அதன்

வாசகப்படித்தான் நடப்போம் என்று கூறுவோர் எந்த லக்ஷ்யத்தைக் காப்பாற்றுவதாக நினைக்கிறார்களோ அந்த லக்ஷ்யத்திற்கே மஹத்தான அபசாரம் செய்தவர்களாவார்கள் என்று. இது வைதிகர்களிடம் மரியாதையாய்த் தெரிவிக்கும் வார்த்தையா? அல்லது புத்தியில்லாமற்போகிற வைதிகர்களே என்று சொல்வதாகுமோ வென்று யோசிக்கவேண்டும். அடுத்து அவரே காலதேச வர்த்தமானங்களையனுஸரித்து புத்திசாலித்தனமாயும் சரியான ஸமயத்திலும் நடந்துகொண்டால்தான் ஹிந்துமதத்தைக் காப்பாற்றமுடியும் என்று சொல்வதால் ராஜகோபாலாச்சாரியார்போன்ற புத்திசாலிகள்தான் ஹிந்துமதத்தைக் காப்பாற்றுகிறவர்களென்றும் வைதிகர்களுக்குப் புத்திசாலித்தனம் போதாதென்றும், அதனுல் அவர்கள் ஹிந்துமதத்தைக் காப்பாற்றமுடியாதென்றும் தெளிவுபடக் கூறிவிட்டார். இன்னும் கூறுகிறார்—உலகம் மாறிக்கொண்டேயிருக்கையில் நான் அசையமாட்டேன். இருந்தவிடத்திலேயே இருப்பேன் என்பது நாசத்தையே தேடிக்கொள்வதாகும் என்று. இப்படியும் வைதிகர்களுக்குச் சவுக்கடி கொடுக்கிறார். அப்புறம் ஆசார்யார் நமக்குக் கீதையை உபதேசித்திருக்கிறார். அது இவ்விதம்:—கீதையை உபதேசித்த பகவானும் வேதத்தின் எழுத்து அல்லது வாசகப்படி நடப்பதைக் கேவலமாகப்பரிஹஸித்திருக்கிறார் என்கிறார். அவ்வளவு கேவலமாக இக்தநாளில்கூட யாரும் கண்டிக்கமாட்டார்கள். அடுத்து இந்துமதத்தின் பெரிய பெரிய ஆசார்யர்களெல்லாம் சமயத்திற்கேற்ற மாறுதல்களுக்குச் சாஸ்திரம் ஒத்துப்போகும்படி செய்துவந்திருக்கின்றனரென்கின்றனர். பொய்யான முறையில் பழமை பாராட்டுவோர் மாறுதலுக்கு எப்போதும் விரோதிகள் யதார்த்தமாய் பழமையில் பெருமைகொள்பவர் லோக மாறுதலுக்குத் தகுந்தபடி மத சம்பிரதாயங்களையும் திருத்திக்கொள்வாராம். பிறர் நிர்ப்பந்தமில்லாமல் நாமே மாற்றிக்கொண்டால்தான் அழகாம். பலவந்தமான மாறுதல்வந்து உபத்திரவம் செய்தால் உபத்திரவத்திற்கும் அஸந்துஷ்டிக்கும் இடமுண்டாகுமாம். இவ்வளவுக்கும் பதிற்கூறிவிட்டு மேலே போவோம்.

ராஜகோபாலாச்சார்யரே! தாங்கள் வைதிக நண்பர்களுக்கு நான் மரியாதையாக விக்ஞாபனம் செய்துகொள்ள விரும்புகிறேனென்று ஆரம்பித்தீர்களே. நீங்கள் அவர்களுக்குச் சொன்ன

வார்த்தைகள் யாவும் லௌகிக ரீதியில் மரியாதையான விக்ஞாபனம்தானே? இருக்கட்டும். ஆகம சாக்ஷியாக எந்த லக்ஷ்யத்தைக் காப்பாற்ற நினைக்கிறார்களோ அந்த லக்ஷ்யத்திற்கே மஹத்தான அபகாரம் செய்தவர்களாவார்கள் என்கிறீர்கள். இவ்வித நிச்சயம் எவ்விதம் தங்களுக்குத் தோன்றிற்றே. வைதிகர்களுக்குத் தெரியாததாக நீங்கள் சொல்வது சரியல்ல. அவர்களது லக்ஷ்யம்

श्रुतिस्मृती ममैवाज्ञे यस्तामुपलंघ्य वर्तते ।
आज्ञाच्छेदी मम द्वेष्यस्स मे वध्यश्च जायते ॥

சுருதிஸ்மிருதிகள் எனது கட்டளை. எனது கட்டளையை எவன் மீறி நடக்கிறானோ அவன் என் கட்டளையை மீறினவன். அவனை நான் கொல்வேனென்ற பகவானது ஆணைக்குப் பயந்து அதன் படியே நடப்போம். அதன் பலனில் நமக்கு உத்தேசமில்லையென்பது அவர்களது லக்ஷ்யம். இதற்குக் கேடு வருமோ? காலதேச வர்த்தமானங்களை அனுஸரித்துப் புத்திசாலித்தனமாயும் சரியான சமயத்திலும் நடந்துகொண்டால்தான் இந்துமதத்தைக் காப்பாற்றமுடியும், உலகம் மாறிக்கொண்டே இருக்கையில் நான் அசையமாட்டேன். இருந்தவிடத்திலேயே இருப்பேன் என்று சொல்லுவது நாசத்தையே தேடிக்கொள்வதாகும் என்கிறீர்கள். காலதேச வர்த்தமானத்தை அனுஸரித்து வைதிகர்கள் நடந்துகொண்டுதான்வருவார்கள். அவர்கள் முன்காலம் போல் குருகுலவாசம் செய்ய யேன் வரவில்லை. ஏன் வேதங்கள் கற்காமல் ஆங்கிலம் கற்கப்போகிறீர்கள். இது தப்பானகார்யம் என்று ஒருவரிடமும் சண்டைபோடப்போகவில்லை. காலத்தை ஒட்டித் தங்களது பிள்ளைகளையும் அதில் கலக்கச்செய்கிறார்கள். இப்படி நடந்துகொண்டதால்தான் இந்துமதத்தைக் காப்பாற்ற முடியுமென்கிறீர்கள். இதுதான் நமக்குப் புரியவில்லை. காலமாறுதலுக்கேற்றவாறு மதம் மாறுதலென்பது எங்கு நடக்கிறது. மதம் நம் இஷ்டப்படியெல்லாம் மாறுமா. மதத்திற்கு அதிகாரி நாமா? ஒருகாலத்திலும் மதம் மாறுகிறதில்லை. மதானுஷ்டானப்படி நடக்காமல் அதை மாற்றினல் பகவான் நம்மைக் கோபியார். மதத்திற்குக் கெடுதல் வருமாயின் அக் கெடுதலை நிவர்த்திசெய்து மறுபடி அதைத் தழைத்தோங்கச்செய்ய அப்போது நான் வரு

வேன் என்று தான் கீதையிற் சொல்லியுள்ளார். மற்றும் இன்னொன்று இப்போது உலகில் விளங்கும் மதங்களில் ஏதாவது காலத்திற்குத் தகுந்தபடி மாறுதல் செய்யப்பட்டிருக்கிறதா. மகமதியர்களும் நம்முடன் ஒன்றுசேர்ந்துவிடப்போகிறதாய் இப்போது பத்திரிகை கூவுகிறதே. இங்கு எவ்விதமான ஒற்றுமை· காலப்போக்கை அறிந்து இருவரும் ஒரே மதக் கொள்கையை அடையப்போகிறதா. அவர்கள் ஆதிமுதல் சொல்லும் 14-விஷயங்களில் இஸ்லாம் மதத்தைப்பற்றி யாது கூறியிருக்கிறார்கள். அதை ஊன்றிப்பார்த்தால் நம் மதத்தைப்பற்றிப் பேச இவ்வளவு ஆர்ப்பாட்டம் வந்திருக்காது. ஆகவே வைதிகர்கள் மதவிஷயத்தில் அசையாமலிருப்பது நாசத்தைத் தேடிக்கொள்வதாகாது. கீதையை உபதேசித்த பகவான் வேதத்தின் எழுத்துப்படி நடப்பதைப் பரிகஸிக்கிறாராம். இது எந்த கீதையிலிருக்கிறது. பகவத்கீதையிலானால் அதில் இல்லவேயில்லை. ஓரிடத்தில் வேதத்திலுள்ள கர்மாக்களைச் செய்து போகம் ஐசுவரியத்தையே விரும்பிக்கொண்டிருந்தால் அவன் இங்கிருந்து ஸ்வர்க்கம் போவதும் அங்கிருந்து இங்கு திரும்பிவருவதும் இவ்விதம் ஜனன மரணத்தையே அனுபவிப்பான் என்று கர்ம நிந்தைசெய்து ஒருக்காலும் அழியாத ஞானத்தை அடையவேண்டுமென்கிறார். அதை எடுத்துச்சொன்னால் இவரது கார்யத்திற்கு ஸாதகமாகாது. அடுத்து இந்துமதத்திற்குப் பெரிய பெரிய ஆசார்யர்களெல்லாம் சமயத்திற்கேற்ற மாறுதல்களுக்குச் சாஸ்திரம் ஒத்துப்போகும்படி செய்துவந்திருக்கின்றனர் என்கின்றனர். இது விஷயத்தில் கூறவேண்டியது ஏராளம். ஆயினும் கொஞ்சம்தான் கூறமுடியும்· சமயாசார்யர்கள் ஒவ்வொருவரும் அத்வைதம் விசிஷ்டாத்வைதம் த்வைதம் என்பதாதி பல மதங்களை ஸ்தாபித்தார்கள். அவ்வம் மதங்களுக்கு ஆதாரம் வேதசாஸ்திர புராணங்களிலிருக்கிறது வேதசாஸ்திரங்கள் பல மதங்களைக் கூறுவானேன் எனின் அனாதியான ஸம்ஸாரத்தில் அவனவனின் வாஸனாபலத்திற்குத் தகுந்தபடி ஆசையும் பலவிதமாகையால் அந்த மனதுக்குத் தகுந்தவாறு ஈசனுக்குப் பல ரூபங்களையும் பல மதங்களையும் கூறுகின்றன. தாய் தனது அருமைக் குழந்தைகளுக்கேற்றவாறு பல தினுசான தின்பண்டங்களைச் செய்துவைத்து அவனவனது ருசிக்குத் தக்கவாறு கொடுத்துக் காப்பாற்றுவாள். அத்தகைய வேதத்

தின் ஒருபாகத்தைத் திரட்டிக் காலத்திற்கேற்றவாறு மத தத்து வங்களை உபதேசித்தார்களே தவிர ஒரு ஆசார்யாளாவது வேதம் சில பாகம் பொய். புராணம் தர்மசாஸ்திரங்களெல்லாம் நம்பத் தக்கதல்லவென்று சொல்லவில்லை. வர்ணாச்ரம தர்மமும் வேண் டாமென்று சொல்ல முன்வரவே இல்லை. எல்லா ஆசார்யர்க ளும் வர்ணாச்ரம தர்மங்களை அவரவர்களுக்கேற்றவாறுதான் நடத் தவேண்டுமென்றுதான் கூறினார்களென்பதை நன்கு கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும். ராமகிஷ்ண, ஸ்வாமி விவேகாநந்தர் முதலியவர்கள் கருத்தைமட்டும் அனுஸரித்தும் பொய்யான தர்க்க வாதங்களால் ஏற்படக் கூடிய விபரீதநிலைமையைத் தவிர்த் தும் வந்திருக்கிறார்களென்கிறார். அதுதான் வைதிகோத்தமர் களது கருத்தும்.

பொய்யான முறையில் பழமைபாராட்டுபவர் மாறுதலுக்கு எப்போதும் விரோதிகள் என்றும் மெய்யாகப்பழமையில்பெருமை பாராட்டுவோர் உலகாயதவாழ்வில் ஏற்படும் மாறுதல்களை அனு ஸரித்தும் மதஸம்பிரதாயங்களையும் திருத்திக்கொள்வரென்கிறார். மதத்தை மாற்றமுடியாதென்று முன்னமே கூறிவிட்டேன். உலகாயதவாழ்வு என்கிறார். உலகாயதமென்றால் நாஸ்திகம் என்று பொருள். ஆகவே அது நாஸ்திகர்களது கொள்கையென் றறியவேண்டும். தாவாரிப் பிரிவுகள் முன்காலத்திற்கு ஒத்திருக் கலாம். அது தற்காலத்திற்கு ஒவ்வாதென்கிறார். இது ஒவ் வாது. தாவாரிப் பிரிவு எககாலத்திலும் நல்ல பலனையும் அழியா நேசப்பான்மையையும் ஒற்றுமையையும் எப்போதும் கொடுக்கும். அவை குறையக் குறையதான் அனர்த்தங்களும், கஷ்டங்களும், அனீதங்களும் நாளுக்கு நாள் வளருகின்றன. இப்போது இந்துமதத்தில் வெறுப்பு உண்டாயிருக்கிறதென்கிறார். அவ் வெறுப்பு இந்துமதத்தில் பிறந்தவர்களுக்கும் அவர்கள்மூலம் மற் றவர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது. இது துரிதமாக வளர்கிற தென்றும் சொல்கிறார். இதைத் தடுப்பதற்கு வழி நம் மதத்தை மற்ற மதஸ்தர்கள்போல நாமும் பாவச்செய்யவேண்டியதுதான் முக்கிய வழி.

அடுத்து மதத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள் குற்றத்தொழி லுடையோர் நீங்கலாக யாவரும் ஒன்றுகூடித் தொழுவதற்கு

என்று ஏற்பட்ட மிகப்பெரிய கோயில்களில் 100க்கு 20ஹிந்துக்களை விடாமல் மற்றவர்களுடைய மாறுங்காணியாகப் பாவிப்பது தேச ஸேவையாகாது. அது தற்கொலைக்கே ஒப்பாகும் என்கிறார்.

இங்கு இதைக் கவனிக்கலாம். மதத்தில் நம்பிக்கையில்லாதாரும் குற்றத்தொழிலுடையோரும். இந்துக்களில்லையா. இந்துக்களுக்குப் பொதுவான கோயிலில் நாங்கள் ஏன் வரக்கூடாது என்று அவர்கள் ஆவாசெய்தால் அவர்களைத்தடுக்க வழியுண்டா. நாங்களும் தெய்வத்தைத் தொழத்தான் வருகிறோமென்று சொல்கிறார்கள். உதாரணமாய்ப் பார்த்தால் வேத சாஸ்திரங்களையே குப்பைத்தொட்டியில் கிழித்தெறியவேண்டியதென்று சொன்ன ஒருவரையே தலைமையாய்க்கொண்டவர்கள்தான் இப்போது இந்துக்களென்று இந்துமதத்தைக் காப்பாற்றுகிறவர்களென்று முன்வருகிறார்கள். இஹிந்துமதப்படி குற்றத்தொழிலுடையோரே. இப்போது இந்துமதத்தைக் காப்பாற்றுகிறவர்களாம். ஆகவே முன் சொன்ன இரண்டிற்கும் அர்த்தமே இல்லை. மற்றும் யாவரும் ஒன்றுகூடித் தொழுவதற்கென்றேற்பட்டதாயும் 100-க்கு 20-பெயர்களை விடாமலும் இருப்பது தவறு என்கிறார். இவ்வார்த்தைத்தான் தவறு. இந்துக்கள் யாவருக்கும் கோவில் பொதுதான். ஆனால் இந்து சாஸ்திரத்தில் வரையறுக்கப்பட்டிருக்கிறபடி அவரவரவர்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கிற அந்தந்த இடத்திலிருந்து தெய்வத்தைத் தொழ யாரும் இதுகாறும் தடங்கல் செய்யவில்லை. இப்போது இந்த வறையறையை மீற பார்ப்பது படுகொலைக்குக் காரணமாகும்.

இனி சில கேழ்விகள் கேட்கின்றனராம். அக் கேழ்விகளையும் அதற்கு வைதிகர்களது விடையையும் வெளியிடுகிறேன்.

(கேள்வி) இந்து தர்மத்தைத் தங்களுக்குத் தோன்றிய வழியில் அனுஷ்டிக்கும் கோடி ஜனங்களை ஒரேயடியாக விலகும்படி சாஸ்திரீகமான ஜாதிப்பிரிவினை நியமங்கள் கட்டளையிடுகின்றனவா?

(பதில்) இந்து மத தர்மத்தைத் தங்களுக்குத் தோன்றிய வழியில் அதாவது தமதிஷ்டப்படி அனுஷ்டிப்பதென்றால் அது இந்து தர்மமே ஆகாது. உதாரணமாய் ஓர் கட்டடத்தைக்கட்டி அதில் ஏராளமான உணவுப்பொருள்களும் மற்ற ஸாதன சாமான்களும் வைத்து ஒருவனை அதிகாரியாய்நியமித்து இதைக்கொண்டு

வரும் சாதுக்களுக்கு உபகாரம் செய். அதற்காக உனக்குச் சம்பளம் இன்னது. அயோக்கியர்களுக்கு இடம் கொடுக்காதே. கொடுத்தால் நீ தண்டிக்கப்படுவாய் என்று வைத்தபிறகு அவன் அதை அவ்விதம் நடத்தாமல் சூதாடிகளுக்கும் குடிகாரர்களுக்குமிடங்கொடுத்தால் அவனை என்ன செய்வார்கள்? அப்படிப்பட்டவனைத் தண்டனையோடு விலக்கவேண்டியதே தவிர வேறு வழியுண்டா? அதுபோல் மதத்தைத் தோன்றியபடி நடத்தினால் 6,கோடியல்ல 60,கோடியானாலும், யாவரும் தள்ளத்தக்கவர்களே. அவ்விதம்தான் சாஸ்திரீயமான ஜாதிப் பரிவினை நியமங்கள் கட்டளையிடுகின்றன.

(கேழ்வி) இம்மாதிரி விலக்குவதன்மூலம் சண்டாளர்களை நாமே உற்பத்திசெய்யும் குற்றத்துக்கு ஆளாகவில்லையா.

(பதில்) இக் கேழ்விகேட்கும் ஆசார்யரின அபிப்பிராயம் இது. ஏதோ தீயத்தொழில் ஒன்றிருக்கிறதென்றும் அதைச் செய்தவர்களை நம் முன்னோர்கள் விலக்கிவைத்ததாயும், அப்படிச் செய்ததனால்தான் இப்படி 6,கோடி ஜனங்கள் ஆய்விட்டதென்றும், இன்னும் இவ்விதம் ஒதுக்கிக்கொண்டேபோனால் நாமே சண்டாளர்களை உத்பத்திசெய்து அக் கூட்டத்தைப் பெருகவைத்தவர்களாகிறோமே என்று கருணையுடன் கேட்கிறார். இந்த எண்ணம் இவர்களினத்தார் முழுமையும் வியாபித்துக்கொண்டிருக்கிறது. அதை நம் மதத்திலிருக்கிறதென்று நினைத்துத்தான் நம்மிடத்திலும் நம் மதத்திலும் இவர்களுக்கு த்வேஷம் உண்டாகிறது. இதைப்பற்றி உண்மையை அறிந்துகொண்டால் இரண்டு த்வேஷமும் நீங்கலாம். ஆகையால் அதனைக் கவனிப்போம்.

பிராமண ஜாதி க்ஷத்திரிய ஜாதி என்பதாதி சொற்போல் சண்டாளஜாதி என்று ஓர் ஜாதி உண்டு. வேத சாஸ்திரங்களில் அந்தந்த ஜாதியின் இலக்கணங்களைக் கூறியிருக்கிறது. ஆகவே ஜாதிகள் அனாதி. அவ்வக் கன்மபயனுக்குத் தக்கவாறு அவ்வச்சாதியை ஜீவன் அடைகிறான். தீயத்தொழிலென்றொன்று தனியாய்க் கிடையாது.

ஒரு ஜாதிக்கு விதிக்கப்பட்ட தொழில் மற்றவனுக்குத் தீயத்தொழில்தான் அவ்வச்சாதிக்கு விதிக்கப்பட்ட தொழில் ஈனமாய் இருந்தாலும் அதையே அனுஷ்டிப்பவன்தான் மேலான ஸித்தி

பெறலாம். இதைப் பாரதம் தர்ம வியாத சரித்திரம் வற்புறுத்துகிறது. ஆகவே நாம் ஒதுக்கி சண்டாள ஜாதியை வளர்ச்செய்யவில்லை. ஆசாரியர் இதைக் கவனிக்கலாம். அவருக்கு அனுபவம் தெரிந்த நாள்முதல் நாளதுவரை எந்த ஊரிலாவது ஈனத்தொழில்காரனானதால் நீ சண்டாளனாய்ப் போகவேண்டுமென்று ஒதுக்கினதாய்ப் பார்த்திருக்கக்கூடுமா. அவ்விதம் ஆய்க்கொண்டு எங்கேயாவது அச் சாதி அதிகமானால் அப்போது ஆசாரியரது கருணைவெள்ளத்திற்குப் பலன் உண்டு. வீணில் பெருகவிடுவானேன். ஆகவே இதன் முன் கேழ்வியில் இந்த எண்ணத்தை வைத்துக்கொண்டுதான் 6,கோடி ஜனங்களைக் கெட்ட தொழில் செய்ததற்காக சாஸ்திரம்விலக்கிவிட்டதாகவோ,ஜனங்கள் விலக்கிவிட்டதாகவோ கூறினார். அதற்கும் இங்கே விளக்கமேற்பட்டதாய் அறியலாம். ஆகவே சண்டாளர்களை நாம் உத்பத்தி செய்யவில்லை. அவனவன் கன்மாவே அதற்குக் காரணம்.

இனி இந்த இந்துக்களான சண்டாளர்களுக்கு சாஸ்திரப்படி ஏற்பட்ட கடமையென்னவென்று கேட்கிறார். அக் கன்மாவையே அவர்கள் அநேகமாய் அனாதிகாலமாய் அனுஷ்டித்தே வருகிறார்கள். நந்தன் முதலிய பக்தர்களின் சரித்திரத்தைச் சாந்த மனதுடன் அடியிலிருந்து படித்துப்பார்த்தால் அது ஒன்றே அவர்களுடைய கடமை இன்னவென்பதையும் கடைத்தேறவேண்டிய வழியையுமவர்களும் மற்றவர்களும் நன்கு கண்டுகொள்ளலாம்.

(கேள்வி) 1. இந்து ஆசாரங்களில் மாறுதலேற்பட அனுமதிக்கவில்லையா. 2. அப்படியிருந்தால் அம் மாறுதல் செய்யக்கூடிய அதிகாரி யார்? 3. அந்த அதிகாரிகளை நாம் எப்படிக் கண்டுபிடிப்பது? 4. அந்த அதிகாரிக்கு இருக்கவேண்டிய யோக்கியதை என்ன? 5 பெரும்பாலான ஒரு மாறுதலை விரும்பினால் சாஸ்திரங்கள் அனுமதிக்குமா? 6. புதிய ஆசாரங்கள் விஷயத்தில் அரசர் ஆக்ஞைக்குப்பர்த்தியான ஆக்ஞை எது? 7. சட்டங்கள் தீட்டு ஏற்படுவதைத் தடுத்துவிடுமோ? என்று. இதற்கு வைதிகர்களின் பதில்.

1. இல்லவே இல்லை. ஒரு யுகத்திலும் ஆசாரத்திற்கு மாறுதலில்லை. அவனவன் அதைப் பூரணமாய் அனுஷ்டிக்காவிட்டா

லும், கலியின் தோஷத்தால் உண்மையாய் இயன்றமட்டிலும் அனுஷ்டித்து மற்றது செய்யமுடியவில்லையே? ஈசனே! நீதான் காப்பாற்றவேண்டும் என்று அவனிடம் பக்தியைச் செலுத்திக் கொண்டு விபரீதம் ஒன்றும் செய்யாமலிருக்கவேண்டும்.

2,3,4,-வது கேள்விகளுக்கு அவகாசமில்லை.

5. இங்கு பக்தர்கள் விரும்பினால் என்று பொதுவாக இருக்கிறதாயினும் ஈசுவர பக்தன், மத பக்தன் என்றுதான் அர்த்தம் செய்துகொள்ளவேண்டும். அவ்விதமாயின் இப் பக்தர்களுக்கு விருப்பமே சொந்தமாய்க் கிடையாது. ஐம்புலனையும் அடக்கி ஈசனது ஆக்ஞையான சாஸ்திரங்களில் பூரண நம்பிக்கை கொண்டு ஒழுகுவானாதலால் அதிலேயே ஆழ்ந்த அவனுக்கு விருப்பம் வெறுப்பு ஏது. இனி தேச பக்தனென்று சொல்வதும் பொருந்தாது. உண்மையான தேச பக்தனும் ஒருவனிருந்தால் நம் தேசம் எவ்விதம் இப்படிக் கெட்டது. கெடாததற்கு முன் நம் தேசம் எவ்விதமிருந்தது. அப்போது ஜனங்களின் நடத்தை எவ்விதமிருந்தது. இதற்கு முன் எப்போது இப்படிக் கெட்டிருந்ததாய்ச் சரித்திரமூலமாய்த் தெரிகிறது. அப்போது அதற்குஎது பரிகாரமாய்ஏற்பட்டது.நாம் அப்போது என்ன நிலையிலிருந்தோம்? இப்போது என்ன நிலையிலிருக்கிறோம் என்பதைக் கவனித்து அதற்கு வழிதேட முயற்சிப்பவன் தேச பக்தன். அத்தகைய தேச பக்தன் எவன் வருவானோ தெரியவில்லை.

6-வதுக்கு விஷயமில்லை.

7-வது. சட்டங்கள் தீட்டு ஏற்படுவதைத் தடுக்கவே மாட்டாது.

தீட்டு என்றும் அனுஷ்டானத்தில் இருக்கும்.

பிறகு நமது ஸம்பிரதாயங்களை பிரிட்டிஷ் நியாயஸ்தலங்கள் வடிக்கட்டிவிட்டனவென்கிறார். அதை நியாயஸ்தலங்களின் தலையில் போடுவதைக்காட்டிலும் செல்வாக்குபெற்ற இந்து மதத்திற் பிறந்த ஆசார சீர்திருத்தக்காரர்களால் நம் ஸம்பிரதாயங்கள் சிதைக்கப்படுகின்றன வெனலாம்.

பொதுஜன அபிப்பிராயம் வளர்ந்து நடை உடை பாவனைகள் மாறவேண்டுமென்பதே நமது விருப்பம் என்கிறார். இங்கு

கவனிக்கவேண்டும். நடை உடை பாவனை ஆசார்யார் அபிப்ரா யத்துக்கு ஒத்து மாறித்தான்வருகிறது. ஒன்று கவனிக்கவேண் டும். ஒவ்வொரு தேசத்திலுமுள்ள நடை உடைபாவனைகள் வெவ் வேறாக இருக்கின்றன. பிரிட்டிஷ் தேசத் தவனையும் ஜப்பான் தேசத் தவனையும், அமெரிக்கா ஜர்மனி தேசத் தவனையும் அவனது நடை உடை பாவனையால் சொல்லாமலே தெரிந்துகொள்ளலாம். அங்கு போவானேன். நம் தேசத்திலேயே ஒரு மனிதனைக் கண்டால் இன்ன தேசந்தான் என்று தெரிந்துகொள்ளலாம். இப்படிப்பட்ட நடை உடைபாவனை மாறினால்தான் நலமென்கிறார். நம் நடை உடை பாவனை மாறி மேற்தேசத்தவர் ஆசாரம்தான் நாளுக்குநாள் நுழைகிறது. அதில்தான் இப்போது தேசஸேவை யில் ஈடுபட்டவர்கள் ஆழ்ந்திருக்கிறார்கள். தேக சௌகர்யத்திற் காக இந்தப் புலிகள் அந்த தேசம்தான் போகிறார்கள். இவர்கள் நம் தேசத்தை முன்னுக்குக் கொண்டுவருபவர்களாம். எந்த தேசத்தின் நடை உடை பாவனையை அனுஸரிக்கிறார்களோ அவர்கள் அந்த தேசத்திற்குத்தான் நம் தேசத்தைக் காட்டிக் கொடுத்துவிடுவர்கள். இவ்விதம் தேசஸேவையோடு நிற்காமல் இப்போது மத ஸேவைக்கும் இவர்கள் முன்வருகிறார்கள்.

உண்ணல், உடுத்தல், குடித்தல், கல்வி, தொழில், முதலியவற் றில் காலத்தை அனுஸரித்து மாறுதல் ஏற்பட்டுத்தான் இருக்கி றது என்கிறார். இந்த மாறுதல் காலத்தை அனுஸரித்ததா? மாறு தலை காலம் அனுஸரித்ததா? ராஜாகாலஸ்யகாரணம் என்று சொல் வதுண்டு. காலத்திற்குத் தகுந்தபடி அரசன் வருகிறானா? அரசனால் காலமாவென்று கேள்வை பிறந்து அரசன்தான் காலத் திற்குக் காரணம் என்பது ஸித்தாந்தம். நாம் வரம்பு மீறி பெரி யோரென்றும் சாஸ்திரங்களென்றும் மரியாதைவைக்காமல் மனம் போனபடியெல்லாம் நடந்துகொண்டு அதன்படி யெல்லாவற்றை யும் மாற்றிக்கொண்டிருந்தால் இது ஒரு முடிவில்போய் நிற்குமா? மாறிக்கொண்டே போகவேண்டியதுதான். இதற்குக் காலம் காரணமில்லை.

தீண்டாதவர்களை ஆலயத்தில் விடவேண்டுமென்று பொது ஜன உணர்ச்சி பலமாய் இருக்கிறது. ஆனால் சட்டம் இடம் கொடுக்கவில்லை என்கிறார். பொது ஜன உணர்ச்சி பலமாய்

இருப்பதென்பது அறியாமற் சொல்வதாகும். கூடாதென்பதில் தான் பொது ஜன உணர்ச்சி பலம் உண்மையில் ஆசார்யர் சொல்கிறபடியானால் இவ்வளவு நாளில் கோவிலுக்குள் போயிருக்கலாம். சட்டப்படி தடுக்க ஒருவரும் முன்வரமாட்டார்கள்.

ஆசார்யர் கடைசியில் முடிக்கும்போது இவ்விதம் கூறுகிறார். பண்டித மாளவ்யா, ஸர். சிவஸ்வாமி அய்யர், ஸ்ரீமான் விஜயராகவாச்சார், மகாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார், ஸ்ரீமான் டி. வி. கல்யாணசுந்தர முதலியார் இவர்கள் அவஸரப்பட்டுக்கொண்டு புதிய வழக்கங்களைக் கையாள்வோர் அல்ல. பழமையை அனுஷ்டிப்பதில் விவேகத்துடன் நடந்துகொள்கிறவர்கள். அவர்களுடைய ஸமூகஸேவையைக் கருதுகையில் ஹிந்துமதத்திற்கு அவர் உத்தம நண்பர்களென்று கட்டாயம் நம்பலாம். கோவிலுக்குள் தீண்டாதார்களை உடனே விடவேண்டுமென்பதே அவர்களுடைய அபிப்பிராயம் என்று.

இதை விசாரித்துப்பாருங்கள். இந்தப்பெரியார்கள் காங்கிரஸ் வாதிகளல்ல, மிதவாதிகள், காங்கிரஸ் அவஸரப்பட்டுக் கேட்கிற ஸ்வாராஜ்யத்தில் அவர்கள்சேராமல் எதிரிடையாய் இருப்பவர்கள் இவர்கள் பழைமையை அனுஷ்டிப்பதில் விவேகத்துடன் அனுஷ்டிப்பவர்களாம். இவர்களது விவேகாநுஷ்டாநத்தை எப்போதாவது ஆசார்யார்கோஷ்டியார் ஏற்றுக்கொண்டதுண்டா, இப்போது இவர்கள்பெரியோர்களாம். இருக்கட்டும். இப்பெரியார்கள் உண்மையில் மதவிஷயத்திலும்பெரியோர்களல்ல, மதவிஷயத்தில் பெரியோரென்றால் மதானுஷ்டானம் உண்மையில் பூர்ணமாய் இருக்குமென்பதை ஆசார்யார் கவனிக்கவேண்டும்.

மற்றும் 20—10—32ல் மித்திரனில் ஆலயப்பிரவேசம் தீண்டாதார்களுக்கு வேண்டாமென்று காட்டி அவர்கள் முன்னேற்றத்திற்கு வேறுவழி கூறியிருக்கிறார். அந்தப்படி இந்த ஆசார்யார் ஒத்துப்போவாரா. அப்படிச் செய்தால் ஒருவருக்கும் மனக்கசப்புக்கு இடமில்லை.

கடைசியில் வைதிகர்கள் ஒன்றுதெரிவிக்கிறார்கள். இவ்விதம் எங்களிடம் விக்ஞாபனமென்று எங்களைத் திட்டவேண்டாம். உலகம் மாறிவருவது நாகரீகம் ஒன்றில்தான். அந்த ஆடம்பர

மாறுதலே மிக அனர்த்தமாய் இருப்பதாய் உங்கள் கோஷ்டியினரே கருதுகின்றனர். மதத்தில் மாறுதலென்பதில் மாறுதலென்று தாங்கள் அபிப்பிராயப்படுவது மதத்திற்கு விரோத வழியில் செல்வதுதான். அவ்விதம் விரோதவழியில் அந்த காலத்தில் சென்றால் நம் க்ஷத்திரிய அரசர்கள் கண்டித்துக்கொண்டிருந்தார்கள். இப்போது அது இல்லாததால் கேட்பாரின்றித் தோன்றியவழியில் அலைகிறார்கள் அதற்குக் காரணம் அளவுகடந்த ஆசைக்குச் சிக்குண்ட மனதுதான். தாங்கள் மதவிஷயத்தில் விசாரிக்கவேண்டுமென்றவபிப்பிராயம் கொண்டிருப்பான் அவ்விதம் மத ஆசார்யர்களிடம் நமது மத முறைப்படி சென்று பணிந்து கேட்டால் விளங்கலாம், வீணில் எங்களை வைவதால் ஒற்றுமை உண்டாய்விடுமோ. இன்னொன்று தங்கள் கோஷ்டியாருக்குத்தான் உலகில் செல்வாக்கு இருக்கிறது. தினஸரிப் பத்திரிகை நடத்துபவர்களெல்லோரும் தங்களினத்தினர். தாங்கள் சொல்வதை எல்லாம் எல்லோரும் பார்க்கும்படி பகிரங்கமாய்ப் பிரசுரிக்கிறார்கள். எம்போன்றவர்களுக்குப் பத்திரிகையேயில்லை. நாங்கள் அப்பத்திரிகைகளுக்குத் தெரிவித்தால் அது வெளிவராது. ஒருசமயம் வந்தாலும் குறைவாயும் ஒருவரும் விசேஷமாய்ப் பார்க்காமலிருக்கும்படி ஓர் மூலையிலும் போடப்படுகிறது. இவ்வளவு விஷமத்தனம் நம்முள் இருக்கும்போது நமக்கா ஸ்வராஜ்யம். சுபம்.

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி.

மநுஸ்மிருதி அத்தியாயம் (2)

சில வசனங்கள்

1. தாயார் பூஜையால் இந்தலோகமும், தகப்பனர் பூஜையால் அந்தரிக்ஷலோகமும், ஆசார்ய பூஜையால் பிரம்மலோகமும் கிடைக்கும்.

2. எவன் இம்மூவர்களையும் பூஜிக்கிறானோ அவன் செய்யும் தர்மங்களெல்லாம் பயனைக் கொடுக்கின்றன. எவன் அப்படிச்

செய்யவில்லையோ அவன் செய்யும் ச்ரௌத ஸ்மார்த்த கர்மங்களெல்லாம் நிஷ்பலமாய்ப்போகும்.

3. இம்மூவர்களும் ஜீவித்திருக்கும்வரை அவர்களின் பூஜையைத்தவிர வேறுதர்மத்தை அவர்களின் அனுமதியன்னியில் அனுஷ்டிக்கக்கூடாது. அவர்களுக்குப் பிரியமாயும் அனுகூலமாயும் இருப்பதை சந்தோஷத்துடன் செய்துகொண்டு உபசரிக்க வேண்டும்.

4. அவர்களின் உபசாரத்திற்கு விரோதமன்னியில் அவர்கள் ஸம்மதத்தின்பேரில் பரலோக சுகத்திற்காக மனதினாலோ, வாக்கினாலோ, கர்மாவாலோ எது செய்யப்பட்டதோ அதை அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டும்.

5 இம்மூவர்களின் பூஜையால் ச்ருதிஸ்மிருதிகளில் விதிக்கப்பட்ட தர்மங்கள் எல்லாம் செய்யப்பட்டதாக ஆகும். ஆகையால் அவர்களின் பூஜையே மேலானது. அக்னிஹோத்ர முதலிய இதரதர்மம் அதற்குக் கீழானது.

6. ஆஸ்திக புத்திபுள்ளவன் மேலான வித்தியையை கீழ்ப்பட்ட ஜாதியாரிடமிருந்துகூட கற்கலாம். சண்டாளனிடமிருந்துகூட மோக்ஷோபாயமான ஆத்துமஞ்ஞானத்தைக் கற்கலாம். உயர்ந்தகுணமுள்ள ஸ்த்ரீயை கீழ் குலந்திருந்துகூடக்கொள்ளலாம்.

7. அமிர்தத்தை விஷத்திலிருந்துகூட எடுக்கலாம். நல்ல வார்த்தையை குழந்தையிடமிருந்துகூட கிரஹிக்கலாம். நல்லொழுக்கம் சத்ருவிடமிருந்துகூட தெரிந்துகொள்ளலாம். தங்கத்தை அசுத்தத்திலிருந்துகூட எடுத்துக்கொள்ளலாம்.

8 எங்கிருந்தும் சீலமுள்ள ஸ்த்ரீ, வித்தியை, தர்மம், சுத்தம், நல்லவார்த்தை, நானாவித சில்பசாஸ்த்ரம் இவைகளை கிரகிக்கலாம்.

9. ஆபத்காலத்தில் (பிராம்மணகுரு கிடைக்காதபோனால்) அப்பிராம்மணனிடமிருந்துகூட அத்யயனம் செய்யலாம். அப்படிப்பட்ட குருவுக்கு அத்யயனம் செய்யும்வரை பின்தொடர்ந்து செல்லும் சுச்ரூஷைமாத்திரம் செய்யவேண்டும். வேறுவித உபசாரங்கள் செய்வது சரியல்ல.

10. மோக்ஷஸுகம் வேண்டுகிறவன், க்ஷத்ரியன் முதலான அப்பிராமண குருவிடனுடனும் வேதம்,வேதாங்கம், அத்யயனம் செய்யாத பிராமணனுடனும் யாவஜ்ஜீவம் வஸிக்ககூடாது.

R. ஸ்வாமிநாதய்யர்,

இதர மதங்கள்.

(R. நடராஜன் எழுதியது.)

ஸனாதன (ஹிந்து)மதசித்ததாந்த்தை அனுஸரித்து எம்மதத்தில்எவர் இருப்பினும் அவரது மதம் மதிக்கப்படவேண்டுமென்றும்எல்லா மதங்களும் பூர்ணசுதந்தாத்தையடைய ஏற்பட்ட படிக்கட்டுகள்போன்றவையென்றும் எம்மதமும் தாழ்ந்ததாகக் கருதப்படுவதாகவோ, நிராகரிக்கப்படுவதாகவோ இருக்கக்கூடாதென்றும் படிக்கட்டினில் ஏதாவதொன்று தகர்க்கப்பட்டால் கஷ்டம் ஏற்படுவதுபோல் எம் மதத்தையும் தாக்குவதால் கஷ்டமே ஏற்படுமென்றும் சொல்லவேண்டும்.

ஆனால் கீழ்படியிலுள்ளவர்கள் தன்னிலும் கீழ்படியை அடையாமல் பாதுகாக்கவேண்டி நாஸ்திக மதங்களிலுள்ள அதிகமான கஷ்டங்களையும் மேல்படியை அடையவேண்டிய ஆவசியகத்தைப் புகட்டுவதற்காக ஆஸ்திக மதங்களிலுள்ள விசேஷ சௌகரியங்களையும் போதிக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது.

அமைதியான பரிசுத்த வாழ்க்கைக்குப் போதுமான அளவுதான் கிருஸ்தவமதம் பௌத்தமதம் முதலியவற்றில் தர்மங்கள் போதிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளின்மூலம் உலக வாழ்க்கைகளில் ஏற்படும் கிரமமான அளவு கஷ்டங்களும் உழைப்புகளும் தவிர்க்கமுடியாதனவே.

மதங்கள் சிலவற்றில் முற்பிறவிகள் பிற்பிறவிகளாகிய முன்ஜன்ம மறு உலக வாழ்க்கைகள் பிரஸ்தாபிக்கப்படவேயில்லை, பிர

கிருதம் அனுபவித்துவருவதாயுள்ள வாழ்க்கையில் ஓரளவு நிம்மதியை ஸ்தாபிப்பதுதான் நோக்கமாகக்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஆனால் ஹிந்துமதத்தில் முந்திய பிறவிகளிலும் இப் பிறவியிலும் முறையே செய்யப்பட்டதாயும் செய்யப்படுகின்றதாயுமுள்ள காரியங்களால் ஏற்படக்கூடிய துக்கங்கலந்த சுகவாழ்வு அல்லது கட்டவாழ்க்கையை முற்றிலும் சுகவாழ்வாகச் செய்ய உபகாரமாகவும், அல்லது கஷ்ட வாழ்க்கைகளைத்தொடரா வண்ணம் செய்ய உபகாரமாகவும் பல சூக்ஷ்மமான மார்க்கங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர சாந்தியும் பரோபகாரமும் தர்மமும் அஹிம்ஸையும் தன்னல மறுப்பும் தேவையானவை. இக் குணங்கள் தன்னிடமிருப்பதாக உலகில் நடித்துக்கொள்வதன் மூலமோ அல்லது சிரமப்பட்டு பல அனுஷ்டானங்களைச் செய்துகொண்டு இவைகள் தன்னிடம் நிலைத்துவிட்டதாக எண்ணிக்கொள்வதன் மூலமோ உயர்ந்த பலனை அடைந்துவிடுவதில்லை. மனிதன் தன்னை மறந்தவனாகவே வழுவாமல் அனுஷ்டானங்களைச்செய்துவர இவைகளும் கொஞ்சம் கொஞ்சமாக அவனிடம் நிலைத்து இச் குணங்களாலேயே அவன் நிறைந்தவனாக ஆகவேண்டும்.

ஒருவனது கடமை ஸத்யம், பரோபகாரம், அஹிம்ஸை, அன்பு என்பதாய ஸாமான்ய தர்மங்களும், ஆத்மோன்னதிக்கான விசேஷ தர்மங்களும் ஆக இருவகைப்படும். ஸம்ஸார ஸாகரத்தில் கஷ்டலேசத்துடன் ஐசுவர்யாதி சுகபோகங்களை அனுபவிக்க ஒருவாறு ஸாமான்ய தர்மங்கள் போதுமாயினும், பிறப்பிறப்புத் துன்பத்தை விலக்க ஸாமான்ய தர்மங்களுடன் கூடிய விசேஷ தர்மங்கள் தவிர்க்கமுடியாதனவாகும். ஸாமான்ய தர்மங்களுடைய அனுஷ்டானரூபமான பரீக்ஷையில் தேர்ச்சியடைந்தவன்தான் விசேஷ தர்மங்களைப் பயன்பெற அனுஷ்டிக்கத் தகுதியுள்ளவன்.

(தொடரும்.)